**STC 88/2023**

**நாள்.24.10.2024**

**DW3 திரு. சரவணன்**

சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பு முதல் விசாரணை தொடர்ச்சி:

1) 2ம் எதிரி பாபு Aarav நிட் கார்மென்ட்ஸ்க்கு 2022 ம் வருடம் ஆகஸ்டு மாதத்திலிருந்து நவம்பர் மாதம் வரை வேலைக்கு வந்த நேரமும் வேலை முடிந்து சென்ற நேரமும் காண்பிக்கக் கூடிய ஆவணத்தை **எ.சா.ஆ.2** ஆகும். அந்த காலக்கட்டத்தில் 2ம் எதிரி வேலை நேரத்திற்கு இடையில் வெளியே சென்று திரும்ப வந்ததை காண்பிக்கக்கூடிய ஆவணத்தை **எ.சா.ஆ.3** ஆக தாக்கல் செய்கிறேன்.

2) Aarav நிட் கார்மென்ட்ஸ்க்கு மூத்த பொதுமேலாளர் மோகன் அவர்களுக்கு அளிக்கப்பட்ட பொது அதிகார பத்திரத்தின் நகலை தாக்கல் செய்கிறேன். 23.08.2022ம் தேதி 2ம் எதிரி எங்கள் நிறுவனத்தில் காலை 8.28 மணிக்கு உள்ளே வந்து இரவு 8.05 மணிக்கு வெளியே சென்றுள்ளார். 06.10.2022ம் தேதி 2ம் எதிரி எங்கள் நிறுவனத்தில் காலை 8.54 மணிக்கு உள்ளே வந்து இரவு 8.05 மணிக்கு வெளியே சென்றுள்ளார்.

<u>புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) 05.08.2022ம் தேதியில் 2ம் எதிரி காலை 8.53 மணிக்கு வந்துவிட்டு இரவு 8.05 மணிக்கு வேலை முடிந்து வெளியே சென்றுள்ளார். அந்த தேதியில் இடையில் வெளியே செல்லவில்லை. 12.08.2022ம் தேதி 2ம் எதிரி காலை 8.51 மணிக்கு வந்துவிட்டு இரவு 8.06 மணிக்கு வேலை முடிந்து வெளியே சென்றுள்ளார். அந்த தேதியில் இடையில் வெளியே செல்லவில்லை.

2) 09.09.2022ம் தேதி 2ம் எதிரி காலை 8.56 மணிக்கு வந்துவிட்டு இரவு 8.03 மணிக்கு வேலை முடிந்து வெளியே சென்றுள்ளார். அந்த தேதியில் இடையில் வெளியே செல்லவில்லை. 17.09.2022ம் தேதி 2ம் எதிரி காலை 8.49 மணிக்கு வந்து விட்டு இரவு 8.04 மணிக்கு வேலை முடிந்து வெளியே சென்றுள்ளார். அந்த தேதியில் இடையில் வெளியே செல்லவில்லை. 07.10.2022ம் தேதி 2ம் எதிரி காலை8.51 மணிக்கு வந்துவிட்டு இரவு 8.05 மணிக்கு வேலை முடிந்து வெளியே சென்றுள்ளார். அந்த தேதியில் இடையில் வெளியே செல்லவில்லை.

3) 27.10.2022ம் தேதி 2ம் எதிரி காலை 8.49 மணிக்கு வந்துவிட்டு இரவு 8.05 மணிக்கு வேலை முடிந்து வெளியே சென்றுள்ளார். அந்த தேதியில் இடையில் வெளியே செல்லவில்லை. 24.11.2022ம் தேதி 2ம் எதிரி காலை 8.53 மணிக்கு வந்துவிட்டு இரவு 8.03 மணிக்கு வேலை முடிந்து வெளியே சென்றுள்ளார். அந்த தேதியில் இடையில் வெளியே செல்லவில்லை. மேலே சொல்லப்பட்ட தேதியில் 2ம் எதிரி வெளியே சென்றாரா என்றால் வெளியே சென்றதாக ஆவணங்கள் எதுவும் இல்லை.

4)இந்த தேதிகளில் 2ம் எதிரி கம்பெனியிலிருந்து வெளியே சென்றிருந்தால் பதிவு செய்திருப்போம். அவர் உள்ளே வந்து வெளியே சென்றதை ஆவணங்களாக தாக்கல் செய்துள்ளேன். ஆவணங்கள் எதுவும் இல்லாமல் வெளியே செல்லமுடியாது செக்யூரிட்டி எங்கு செல்வதாக கேட்பார் ஆவணங்கள் இல்லாமல் வெளியே செல்லமுடியாது. எங்கள் நிறுவனத்தில் கண்காணிப்பு கேமராவில் அதிகபட்ச 15

நாட்கள் கண்காணிப்பு கேமரா பதிவுகளை சேமித்து வைத்திருப்போம். இடத்திற்கு தகுந்தாற்போல் அதிகபட்சம் 1 மாதம் பதிவு செய்து வைத்திருப்போம்.

5) மேற்கண்ட தேதிகளில் 2ம் எதிரி வெளியே சென்று வந்ததற்கான ஆதாரங்களை புகார்தாரர் தாக்கல் செய்தால் 2ம் எதிரி மீது நிறுவனத்தில் நடவடிக்கை எடுப்பீர்களா என்றால் கண்டிபாக எடுப்போம். மேற்கண்ட தேதிகளில் 2ம் எதிரி திருப்பூர் நீதித்துறை நடுவர் எண். 3ல் வழக்கிற்காக ஆஜராகியிருந்தார் என்றால் எனக்கு தெரியாது. மேற்கண்ட தேதிகளில் 2ம் எதிரி எங்கள் நிறுவனத்தில் வேலை பார்த்ததாக தாக்கல் செய்த 2 ஆவணங்கள் 2ம் எதிரியுடன் எங்கள் நிறுவனம் சேர்ந்து போலியாக உற்பத்தி செய்த ஆவணம் என்றாலும் அது ஏற்புடையதல்ல என்றாலும் சரியல்ல.

6) 2ம் எதிரி எங்கள் நிறுவனத்தில் வேலை பார்த்து வருவதால் அவர் மீதான அனுதாபத்தில் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் அவருக்காக பொய் சாட்சியம் என்றால் சரியல்ல.

7)நான் செய்துள்ள ஆவணத்தில் 2ம் எதிரி 23.08.2022, 06.10.2022ம் தேதி வெளியே செல்லவில்லை என்று எவ்வாறு உறுதியாக என்னால் சாட்சியம் அளிக்க முடிகிறது என்றால் என்னிடம் ஆவணங்கள் எதுவும் இல்லை என்று தான் சொல்கிறேன். 05.08.2022, 12.08.2022, 09.09.2022, 17.09.2022, 07.10.2022, 27.10.2022, 24.11.2022 ஆகிய தேதிகளில் 2ம் எதிரி வெளியே சென்றாரா இல்லை என்று உறுதியாக சொல்லமுடியுமா என்றால் எங்கள் ஆவணத்தின் மூலமாக வெளியே செல்லவில்லை. 23.08.2022, 06.10.2022ம் தேதிகளில் 2ம் எதிரி வெளியே வந்துள்ளார் என்றால் வெளியே போக முடியாது.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA

Digitally signed by K CHITHRA
Date: 2024.10.24 14:55:46 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.